**போக்குவரத்து செயற்திட்டத்தை ஆயத்தமாக்குதல் வசதி செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்து செயற்திட்டத்தை ஆயத்தமாக்குதல் வசதி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர 31 இல் முடியவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமடையே கைசாத்திடப்பட்ட 3425 SRI (SF) ஆம் இலக்க 2017 ஒக்தோபர் 28 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைக்கு இணங்க அப்போதைய துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சான தற்போதைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவாகவும் உள்ளது. செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் போது சாத்தியவள ஆய்வு, விபரமான வடிவமைப்பும் பெறுகை ஆவணமும் என்பவற்றை தயாரிப்பதன் மூலமும் அமுலாக்கல் ஆதரவுகளை வழங்குவதன் மூலமும் வீதி, புகையிரதம் துறைமுகம் என்பவற்றிலுள்ள முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் ஆரம்பிக்கும் செயற்திறனை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது வீதிகள், புகையிரதம், துறைமுகம் ஆகிய மூன்று (03) கூறுகளின் கீழ் அமுலப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,697.48 மலில்லியனுக்குச் சமனான யு.எஸ் டொலர் 11.34 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,496.90 மில்லியனுக்குச் சமனான யு.எஸ் டொலர் 10 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 200.58 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2017 சனவரி 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலப்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும்பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு

அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிகள் |
|---|---|---|---|---|
| (அ) | உயர்வான பெருந்தெருக்கள் செயற்திட்டத்தின் கீழ் மூன்று ஆலோசனை வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனினும் அவை திருத்தம் செய்யப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடைமுறை வேலைக் கணக்கில் காணப்பட்டது. | 361.53 | போக்குவரத்து செயற்திட்டத்தை ஆயத்தமாக்குதல் வசதி செயற்திட்டத்தை பூர்த்திசெய்ததன் பின்னர் அனைத்து சொத்துக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்படும். | நடைமுறை வேலையின் சரியான தொகையை நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய கால பிழைகளானது கடந்த காலம் தொடர்பாக மீளக் கூறுவதன் மூலம் சரிசெய்யப்படுதல் வேண்டும். எனினும் முன்னைய ஆண்டுகளுக்குரியதான பதிவுசெய்யப்படாத ரூபா 22.6 மில்லியன் வட்டிக் கட்டணமானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 22.6 | 2023 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச PPP பெறுகை ஆலோசனைகளின் வேலையானது 2020 யூலை 14 ஆந் திகதியில் 100 சதவீத செயல்முன்னேற்றத்தினை எதிர்பார்த்திருந்த போதிலும் ஆலோசனை வேலையின் பௌதீக செயல்முன்னேற்றமானது மீளாய்வாண்டு வரையும் 72 சதவீதமாக காணப்பட்டது. | அத்துருகிரிய உயர்த்தப்பட்ட பெருந்தெரு செயற்திட்டம் இந்த ஆண்டில் கைவிடப்பட்டதன் காரணமாக PPP பெறுகை ஆலோசகர் ஒப்படைப்பினை பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. | தாமதத்தினை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய வேளையில் ஆலோசனை வேலைகளை பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நான்கு ஆலோசனை வேலைகளில் மூன்று ஆலோசனை வேலைகளின் அறிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி வரையும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வெளிக்கள ஆய்வு அறிக்கை, வரைபு அறிக்கை, நிதி அறிக்கை, இறுதி அறிக்கை என்பவற்றை சமர்ப்பித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பவற்றின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே ஏனைய மூன்று ஆலோசனை வேலைகளின் செயல்முன்னேற்றத்தினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | கையளிப்புச் செயன்முறை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் ஆவணங்கள் கணக்காய்விற்கு கையளிக்கப்படும். | ஆலோசனை அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) செயற்திட்ட நிருவாக கையேட்டின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வீதிக் கூறுக்காக யு.எஸ் டொலர் 10 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரை யு.எஸ் டொலர் 2.58 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. உத்தேசிக்கப்பட்ட அதிவேகப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படாமை மற்றும் ஆலோசனை வேலைகள் பூர்த்திசெய்யப்படாமை நிதிகளின் மிகக்குறைந்த பயன்பாட்டிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | இந்த ஆண்டு அத்துருகிரிய உயர்த்தப்பட்ட பெருந்தெரு செயற்திட்டம் கைவிடப்பட்டதன் காரணமாக தனிப்பட்ட ஆலோசனைகளில் ஒன்றினை (PPP பெறுகை ஆலோசகர்) பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் ரூபா 40 மில்லியன் நிதி எற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தினால் இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதி வேகப்பாதை அபிவிருத்தி திட்டம் திறைசேரியினால் ஏற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக திட்டமிட்டவாறு இலங்கை அரசாங்கத்தின் செலவுகள் உருவாகியிருக்கவில்லை. | இலங்கை அரசாங்கத்தின் நிதி செயற்திறனாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |